[1974 மார்ச் 28

ராங்கியன் கண்மாய்.

* 650 வினா—திரு. த. சோணையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ராங்கியன் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?

(இ) ஆம் எனில், மொத்த மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, இந்த ராங்கியன் கால்வாயில் மண் மேடிட்டு சரியான முறையில் பாசனத்திற்கு தண்ணீர் தேங்குகிற மாதிரி பள்ளமாக இல்லை. ஆகவே, இந்த ஆண்டு அதைப் பரிசீலனை செய்து, அந்தக் கண்மாயை ஆழப்படுத்த அரசாங்கம் ஆலோசனை செய்யுமா? மேலும், இன்றைக்கு வைகை சீரமைப்பு திட்டத்தின் மூலமாக நாட்டு மக்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த வைகை நீரை இந்த ராங்கியன் கண்மாய்க்கு கொடுத்து உதவ அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மூலக் கேள்வி தூர் வாரப்படுமா என்பதைப் பற்றியதாகும். அது இல்லை என்று நான் தெரிவித்தேன். காரணம், ஏரியின் எதிர் வயலில் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். தூர் வாரி கொட்டினால் நிலச் சொந்தக்காரர்கள் அதற்கு ஆட்சேபனை செய்கிறார்கள். மண் எடுத்து வேறு இடத்திற்கு கொண்டு சென்று கொட்டுவது என்றால் செலவு அதிகமாகும். ஆகவே, குறிப்பு இல்லை என்று சொன்னேன்.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, கண்மாயைத் தூர் எடுக்க அரசு ஆவன செய்தால், அதற்கு அந்த விவசாயிகள் சம்மதிப்பார்கள். அப்படிச் செய்தால், அரசாங்கம் தூர் எடுப்பதற்கு உடனடியாக உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் அப்படிச் சம்மதம் வாங்கித் தருவார்களானால், அரசு அதைப் பரிசீலிக்கும்.